6 மார்ச் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் - தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக தண்ணீர் தினம் (மார்ச் 22)**

## கடவுளைக் கேள்வி கேட்பதை நிறுத்துங்கள்



தொற்றுநோய்கள் தோன்றும்போது நாம் எதிர்கொள்ளும் சவால்களை நம்மில் சிலரால் சமாளிக்கமுடியாமல் விட்டுக்கொடுப்பது போல் உணரலாம். இவை நடைபெற அனுமதித்ததற்காக கடவுளையும் நம்மில் சிலர் குறைகூறியிருக்கலாம். ஏதேன் தோட்டத்தில் ஆதாமிடம் “நீ எங்கே இருக்கிறாய்? என்று கடவுள் கணக்குக் கேட்டதைப் போல, நாமும் கடவுளிடம், “இந்த தொற்றுநோய் மத்தியில் நீர் எங்கே இருக்கிறீர்” என்று கடவுளைக் கணக்குக் கேட்கிறோம். அல்லது இந்த தொற்றுநோய்க்காலத்திற்கு முன்பும் குறிப்பாக, நம்முடைய தனிப்பட்ட துன்பங்களின் போதும் இப்படிப்பட்ட கேள்வியை நாம் கேட்டிருப்போம்.. நம்முடைய துன்பங்களை நியாயப்படுத்த, தொடர் அழுகையால் கடவுளைக் கேட்டிருப்போம். குறிப்பாக இந்தத் துன்பம் அதிகம் என்றும் அல்லது இவை எனக்கு நிகழ்ந்திருக்கக்கூடாது என்றும் நாம் எண்ணியிருப்போம்.

இயேசுவும் கூட மனித துன்பங்கள், மற்றும் சோதனைகளின் துயரத்திலிருந்து விடுபடவில்லை. நம்மில் பலர் நாம் அனுபவித்த துன்பங்களை இயேசு பாலைவனத்தில் எதிர்நோக்கியதோடு ஒப்பிட்டுப்பார்ப்பர். மனிதனின் முதல் அடிப்படைத் தேவை பசியை நிறைவு செய்யவேண்டும். கல்லை அப்பமாக மாற்றும்படி வந்த சோதனை. இயேசுவுக்கு வந்த சோதனை, “தனது மனிதத் தன்மையை ஒதுக்கி வைத்துவிட்டு, கடவுளின் மகன் என்பதால், தான் விரும்பிய எதையும் செய்யமுடியும் என்ற சோதனை. நம்மில் பலரும், நாம் விரும்புவதைப் பெறுவதற்கும் அற்புதங்கள் செய்வதற்கும் “தெய்வீக” சக்திகள் இருக்கவேண்டும் என்று எத்தனை முறை ஆசைப்பட்டிருப்போம்?

சோதனைகளின் அடுத்த நிலை - அதிகாரத்திற்கான பசி. இதன்பொருள் நம்முடைய சொந்த நோக்கத்திற்காக, அங்கீகாரத்தையும் பிரபலத்தையும் தேடுவது. பிறரிடமிருந்து மரியாதையையும், கீழ்ப்படிதலையும் எதிர்ப்பார்ப்பது, இறுதியில் மக்கள் மீதும் சூழ்நிலைகள் மீதும் முழுமையான அதிகாரத்தைக் கையாளுதல். இத்தகையான சக்திமிக்க ஆசை, நம்முடைய அடிப்படை தார்மீக நோக்கத்தை அழித்துவிடும். குறிப்பாக கடவுள் உட்பட நம் வாழ்வில் அதன் முக்கியத்துவத்தை வேறு எதனோடும் ஒப்பிடமுடியாது.

சோதனையின் இறுதிநிலை - ஆதாமுக்கும் அவரின் வழிதோன்றல்களான நமக்கும் வந்த சோதனை - கடவுளாக வேண்டுமென்ற ஆசைக்கு நம்மை மீண்டும் இழுக்கிறது. அனைத்திற்கும் மேலாக, மனிதர்களாகிய நம்மை, வாழ்க்கையின் பலதுறைகளில் சிறந்த படைப்பாளர்களாகவும், கண்டுபிடிப்பாளர்களாகவும் வரலாறு காட்டியுள்ளது. மேலும் வாழ்க்கையையே ‘மீண்டும் உருவாக்க” நாம் முயலும்போது, அனைத்தும் குறிப்பாக வாழ்வு அனைத்தும் கடவுளிடமிருந்தே வருகிறது என்பதைக் காண இயலாததால், படைப்பின் தொடக்கத்தில் இருந்த மிக அடிப்படையான பாவத்திற்கே நாம் திரும்புகிறோம்.

இயேசு தம்முடைய சோதனைகளை மனப்பூர்வமாக செய்ததைப் போல இறுதியில் இந்தச் சோதனைகளை நம்பிக்கையோடும் உறுதியோடும் எதிர்கொண்டால், கடவுள் தான் கட்டுப்பாட்டில் இருக்கிறார், நாம் அல்ல என்பதை உணரலாம். கடவுளுடனான நமது உறவின் நோக்கங்கள் உயர்ந்தால், அல்லது அதையும் தாண்டிச்சென்றால் மட்டுமே, நாம் கடவுளைக் கேள்வி கேட்பதை நிறுத்தி, நம்முடைய சோதனைகள், துயரங்களுக்கு கணக்குக் கேட்கலாம்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்.

(ரோ 10:13)

**இன்றைய வாசகங்கள்:**

இச: 26: 4-10;
திபா:91: 1-2, 10-15;
உரோமை: 10: 8-13;
லூக்கா 4:1-13.

INTERNAL CIRCULATION ONLY
BUL 10/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org